முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 20.08.2025 அ.வ.எண்.369/2021 பி.வா.சா.1. நித்யசரண்/பெ.பழனிச்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1.எனது தயார் ஜெயந்தி சட்டப்படியான வரிசு இல்லை என்பதால்தான் அவரை தரப்பினராக கட்சிசேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது தயார் ஜெயந்திக்கும் இறந்துபோன மருத்துவர் பழனிச்சாமிக்கும் திருமணம் நடைப்பெற்றதா கூறியுள்ள நிலையில் அந்த திருமணம் கோவிலில் நடந்ததாக அல்லது மண்டபத்தில் நடந்ததா என்று குறிப்பிடவில்லை என்றால் கோட்டுர் விநாயகர் கோவிலில் நடந்தது. மேற்படி விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அம்மா அப்பா சொல்லித் தெரியும்.

2.மேற்படி திருமணம் நடந்ததற்குன்டான ஆதரவாக புகைப்படமோ, பத்திரிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி திருமணத்தை பதிவு செய்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் ஒரு திருமணமே நடைபெறவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. டாக்டர் பழனிச்சாமியும் எனது அம்மாவும் கூட்டாக கிரயம் பெற்றதாக கூறியுள்ள நிலையில் கிரயத்தொகையை யார் கொடுத்தது என்றால் எனக்குத் தெரியாது.

3.கூட்டாக கிரயம் வாங்குவதால் மட்டுமே அவர் சட்டப்படியான வாரிசாக வரமுடியாது என்றால் சரியல்ல. எனது தயார் ஜெயந்தி என்ன தொழில் செய்துவந்தார் என்றால் நர்சாக பணிபுரிந்து வந்தார். எனது நர்சிங் படித்துள்ளரா என்றால் படித்துள்ளார். அதற்குன்டான ஆதரவுகள் நான் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தயார் நர்சாக பணிபுரியவில்லை என்றும்

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

டாக்டர் பழனிச்சாமியிடம் டோக்கன் கொடுக்கும் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வேலை செய்துவந்த சமயத்தில் குறைந்த சம்பளம் தான் வாங்கி வாழ்க்கை நடத்தி வந்தார் என்றும், அதனால் கூட்டாக சொத்து
வாங்கும் அளவிற்கு அவருக்கு பண வசதி இல்லை என்றால் சரியல்ல. டாக்டர் பழனிச்சாமியை வற்புறித்தி, கட்டாயப்படுத்திதான் எனது தாயார் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. டாக்டர் பழனிச்சாமி எனது தாயார் நான் அனைவரும் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் மூவரும் சேர்ந்து வாழ்ந்ததற்காக குடும்ப அட்டை வேறு அடையாள அட்டை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4.நாங்கள் சேர்ந்து வாழவில்லை என்றும் அவ்வாறு வாழ்ந்திருந்தால் குடும்ப அட்டை பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. டாக்டர் பழனிச்சாமி நடந்திவந்த கிளினிக் பெயர் என்ன என்றால் ஜெயம் கிளினிக் ஆகும். எனது தாயார் பெயர் ஜெயந்தி ஆகும். ஜெயம் என்கிற பெயர் வேறு ஜெயந்தி என்கின்ற பெயர் வேறு என்றால் எனது அம்மாவின் பெயரைத்தான் அவ்வாறு வைத்தார். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பென்சன் ஸ்கீமில் எனது தாயாரை நாமினியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது தாயார் ஜெயந்தி டாக்டர் பழனிச்சாமி கிளினிக்கில் வேலை செய்தபோது டாக்டரை வற்புறித்திதான் மேற்படி பெயரைச் சேர்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல.

5.பென்சன் ஸ்கீமில் பெயர் சேர்ப்பதால் மட்டுமே சட்டப்படியான மனைவியாகவோ, வாரிசாகவோ வர மாட்டார்கள் என்றால் சரியல்ல. 1ம் வாதி சந்திரலேகா இன்றும் உயிரோடு இருப்பதால் எனது தாயார் ஜெயந்தி இறந்துப்போன

ஒப்பம்/- (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

பழனிச்சாமிக்கு சட்டப்படியான மனைவி ஆகமாட்டார் என்றால் சரியல்ல. டாக்டர் பழனிச்சாமிக்கு சொத்துக்கள் அதிகம் உள்ளதால் அதை அபகரிக்க வேண்டி எனது தாயார் டாக்டர் பழனிச்சாமியின் மனைவி என்று தன்னை கூறிவருகிறார் என்றால் சரியல்ல. தவறாக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இதேபோல் பல வழக்குகளை வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்து அவர்களை அழைக்கழித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.